பன்னிரண்டு பொறியியல் கல்லூரிகள் அரசுத் தரப்பிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. இதுவரை சுதந்திரம் அடைந்ததிலிருந்து, இந்தியாவில் அரசு பொறியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை மொத்தமே 6 தான். இந்த நான்கு ஆண்டுகளில், இப்போது இந்த ஆண்டினையும் சேர்த்து, 12 அரசு பொறியியல் கல்லூரிகளைத் தொடங்கியிருக்கின்ற அரசு தமிழக அரசு என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

5—

கட்டட வசதி

***116614—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கென தகுந்த நிலத்தினைப் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய நிலம் கிடைத்தவுடன் இவ்வலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

2010 நவம்பர் 9]

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் சுமார் 5 ஆயிரம் போக்குவரத்து வாகனங்களைக் கொண்ட ஒரு அலுவலகமாக இயங்கி வருகின்றது. நாள்தோறும் 30–லிருந்து 40 வாகனங்களுக்கு உரிமம் பெறுவதற்காக அங்கு விண்ணப்பிக்கின்றார்கள். இந்த அலுவலகம் மக்கள் போக்குவரத்து மிக அதிகமாக இருக்கின்ற பகுதியில் அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், அதுவும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்ற காரணத்தினாலும், இவற்றைக் கருத்தில் கொண்டும், கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக வருவாய்த் துறையிலிருந்து 4 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு துறைவசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நான்கு ஆண்டுகளாகியும் அந்த இடத்தில் இன்னும் கட்டடம் கட்டப்படாமல் உள்ளது. இப்போது புறவழிச் சாலை அமைப்பதற்காகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தச் சூழ்நிலையில், இதற்கு மாற்று ஏற்பாடாக, வாகனங்களைப் பழுதுபார்க்கும் உரிமையாளர்கள் சங்கத்திற்குச் சொந்தமான இரண்டு ஏக்கர் நிலம் துறையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றது. மூன்று ஆண்டுகள் இதில் காலதாமதமாகியும், அந்த இடத்தில் கட்டடம் கட்டப்படாத சூழ்நிலையில் மாற்று ஏற்பாடாக, வாகனங்களைப் பழுதுபார்க்கும் சங்கத்தினர் மனமுவந்து இரண்டு ஏக்கர் நிலம் தந்திருப்பதைப் பயன்படுத்தி, இந்த இடத்தில் விரைந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் செக்கசாசப்பாளையம் என்ற கிராமத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இரண்டு ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு துறைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பகுதியிலே நான்கு வழிச் சாலை வருவதாகவும், வேறு இடத்தில் நீங்கள் இந்த அலுவலகத்தை அமைத்துக்கொள்ள வேண்டுமென்றும் நெடுஞ்சாலைத் துறை சொல்லியிருக்கின்ற காரணத்தினால் வேறு

இடத்தை துறை பார்த்துக்கொண்டிருக்கிறது. இப்போதுதான் பணிமனை உரிமையாளர்கள் இரண்டு ஏக்கர் நிலம் தருகிறோம் என்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் நிலத்தை தரவில்லை. எனக்குக் கொடுத்த குறிப்பிலே அப்படித்தான் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்களிடம் நிலம் தரப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். கட்டடம் கட்டுவதிலே எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஏனென்று சொன்னால், இந்த நான்கரை ஆண்டுக்காலத்தில் மட்டும்— கிட்டத்தட்ட 2006 வரை, போக்குவரத்துத் துறைக்கு 22 சொந்தக் கட்டடங்கள்தான் இருந்தன—2006-க்குப் பிறகு ரூபாய் 35 கோடியே 94 இலட்சம் செலவில் 39 சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, கட்டடம் கட்டுவதற்குப் பணத்தைப் பற்றி எங்களுக்கு ஒன்றும் சிரமம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருப்பதைப்போல, இடம் தந்திருப்பார்களேயானால், வெகு விரைவாக, எவ்வளவு விரைவாக அதைக் கட்ட முடியுமோ அவ்வளவு விரைவாகக் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

திரு. ஓ.கே. சின்னராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன ஓட்டுநர்கள் உரிமம் பெறுவதற்கு குறைந்தபட்ச கல்வித் தகுதி 8 ஆம் வகுப்பு வரை தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்ற ஒரு சட்டத்தை மத்திய அரசாங்கம் இயற்றியிருக்கிறது. ஆனால், நாடு தழுவிய அளவில் இலட்சக்கணக்கான வாகன ஓட்டுநர்கள் தொடர்ந்து 10, 15 ஆண்டுக்காலமாக ஓட்டுநர்களுக்கு உதவியாளர்களாக இருந்து, பயிற்சி பெற்று உரிமம் பெறுவதற்கு விண்ணப்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய எதிர்க்கால வாழ்வாதாரம் கேள்விக்குறியாக இருக்கின்ற சூழ்நிலையில், மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கின்ற விதியைத் தளர்த்தி மாநில அரசாங்கம் தமிழகத்திலே விண்ணப்பித்திருக்கின்ற இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்வாதாரத்தைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்று...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொந்தக் கட்டடத்தைக் கேட்டுவிட்டு திரும்ப வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிறீர்கள். Track மாறி போய்க்கொண்டிருக்கிறீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

2010 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே தமிழ்நாட்டில் 10 ஆம் வகுப்பு வரை pass செய்திருக்க வேண்டும். 10 ஆம் வகுப்பு pass செய்திருந்தால்தான் Heavy Vehicle License எடுக்க முடியும் என்று இருந்ததை மாற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த மாதம்தான் 8 ஆம் வகுப்பு வரை pass செய்திருந்தால் அவர்களுக்கெல்லாம் License தரலாம் என்று ஒரு உத்தரவை வழங்கியிருக்கிறார்கள். உயரம்கூட 160 சென்டி மீட்டர் என்றிருந்ததை அரை சென்டி மீட்டர் குறைத்து 159.5 சென்டி மீட்டர் இருந்தால் போதும், அவர்களுக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கலாம் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவு தந்திருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற லாரி உரிமையாளர் சங்கங்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த மாற்றத்தை இப்போது அறிவித்திருக்கிறார்கள். 8 ஆம் வகுப்பு வரைகூட pass செய்யாதவர்கள் அண்டை மாநிலங்களுக்குச் செல்கின்றபோது அங்கேயிருக்கின்ற எழுத்துக்களை படிக்கவோ அல்லது பேசவோ முடியாது என்ற காரணத்தினால்தான் minimum qualification ஆக 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்று வைத்திருக்கிறார்கள். எனவே, அதை மாற்றுவதற்கு நமக்கு எந்த உரிமையும் இல்லை. மத்திய அரசுதான் அதை மாற்ற வேண்டுமேதவிர, நமக்கு அந்த உரிமை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

திரு. வீ.ஏ.டி. கலியவரதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருக்கோவிலூர் தொகுதிக்குட்பட்ட திருக்கோவிலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட்டு இதுநாள் வரையில் சிமென்ட் தளம் அமைக்காததால் வாகனங்கள் உள்ளே சென்று வருவதற்கு மிகவும் சிரமமாக இருக்கின்றது. அதற்கு சிமென்ட் தளம் அமைத்துத்தர வேண்டுமென்றும், அனந்தபுரத்திலே ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் வேண்டுமென்றும் நான் கேட்டிருந்தேன். அதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[2010 நவம்பர் 9

அதேபோன்று திருக்கோவிலூரிலே பேருந்து நிலையம் வேண்டுமென்று பலமுறை சொல்லியிருக்கிறேன். அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் மிகவும் கஷ்டப்படுகின்ற ஒரு நிலை இருக்கின்றது. பேருந்து நிலையம் அமைக்காததால், திருக்கோவிலூர் சென்று வருவதற்கு அங்கே இருக்கின்ற மக்கள் எல்லாம் மிகவும் அவதிப்படுகிறார்கள். உடனடியாக புதிய பேருந்து நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கின்ற அலுவலகத்திற்கு ஓட்டுநர் தேர்வு தளம்—சிமெண்ட் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இப்போது புதியதாக 22 இடங்களிலே ஓட்டுநர் தேர்வு தளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும் புதிய கட்டடங்கள் கட்டுகின்றபோது அந்தக் கட்டடத்தின் அருகிலேயே ஓட்டுநர் தேர்வு தளம் இல்லாமல் எந்த ஒரு புதிய கட்டடமும் கட்டப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே இருக்கின்ற அலுவலகம் விடுபட்டுப் போயிருக்கும் என்று கருதுகிறேன். அதைக் கருத்தில் கொண்டு, உடனடியாக அதைக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதே நேரத்தில் பேருந்து நிலையம் அமைப்பது எங்களுடைய பணி அல்ல. பேருந்து நிலையம் கட்டித் தந்தால் அதிலே பேருந்து விடுவதுதான் எங்களுடைய வேலையாக இருக்கிறது. பேருந்து நிலையம் அமைப்பது மாண்புமிகு துணை முதலமைச்சருடையது. உங்களுடைய கருத்து மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்கப்படும்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.